டால்பின்

DOLPHIN Primary Books

# சுந்தரத்தமிழ் இலக்கணப் பயிற்சி

## நூல் தொடர்



4

## சொல்

ஓர் எழுத்து தனித்து வந்தோ, பல எழுத்துக்கள் தொடர்ந்து வந்தோ பொருளைத் தந்தால் அது சொல் எனப்படும்.

சொல் இலக்கண வகையில் நான்கு வகைப்படும். அவை பெயர்ச் சொல், வினைச் சொல், இடைச் சொல், உரிச் சொல் முதலானவை.

ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச் சொல் எனப்படும்.
(எ.கா.): பூங்கா, பறவை, வள்ளி, மாறன்.

ஒரு செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.
(எ.கா.): பறந்தது, தேடினேன், எழுதினாள்.

### பயிற்சி எண் : 8.

### பின்வரும் தொடர்களில் உள்ள பெயர்ச்சொற்களை எடுத்து எழுதுக.

1. தாமரை குளத்தில் உள்ளது. ______________________

2. மணி, வேலன் இருவரும் நண்பர்கள். ______________________

3. அன்னை தெரசா கருணை மிக்கவர். ______________________

4. வாணி வீணை மீட்டினாள். ______________________

5. உழவர் வயல் உழுதனர். ______________________

6. மாதவி ஓவியம் வாங்கினாள். ______________________

7. நான் குடை வாங்கினேன். ______________________

8. சென்னையில் கடற்கரை உள்ளது. ______________________

9. நீ நாளை ஏணி கொண்டு வரவேண்டும். ______________________

10. தாத்தா கைத்தடியைத் தேடினார். ______________________

## அடுக்குத் தொடர்

இரு சொற்கள் தொடர்ந்து வந்து, பிரித்தாலும் கூட அவை பொருள் தரும்.
இதுவே அடுக்குத் தொடர் எனப்படும்.
(எ.கா.): உழைத்து உழைத்து, பாடப்பாட.

### பயிற்சி எண் : 24. தகுந்த அடுக்குத்தொடர் கொண்டு நிரப்புக.

1. அவன் ______________ க்களைத்தான்.
2. குழந்தை ______________ அழுதது.
3. தண்ணீர் ______________ ச் செடி வளரும்.
4. பட்டம் ______________ ச் சென்றது.
5. இசையைக் ______________ இன்பம் உண்டாகும்.
6. ______________ க் கையெழுத்து அழகு பெறும்.
7. கரையோரம் ______________ த் தண்ணீர் வந்தது.
8. மீன் ______________ நழுவியது.
9. காற்று ______________ வீசியது.
10. ______________ கால் வத்தது.

(சுழன்று சுழன்று, தோண்டத் தோண்ட, பிடிக்கப் பிடிக்க,

நடந்து நடந்து, ஊற்ற ஊற்ற, ஓடி ஓடி, எழுத எழுத,

தேம்பித் தேம்பி, உயர உயர, கேட்கக் கேட்க)

# நிறுத்தற் குறிகள்

எழுத்து என்பது மொழியின் வரிவடிவம். எழுதியதைத் தெளிவாகப் பொருளுணர நிறுத்தற்குறிகள் இன்றியமையாதவை ஆகும்.

காற்புள்ளி ( , ) – நிறுத்தி வாசிக்கக் குறிப்பிடப்படும்.
(எ.கா.): மா, பலா, வாழை முதயன முக்கனிகள்.
மேற்கோள்குறி ( " " ) – ஒருவர் பேசிய பேச்சை அவ்வாறே எழுதக் குறிப்பிடப்படும்.
(எ.கா.): "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்றார் வள்ளலார்.
முற்றுப்புள்ளி ( . ) – வாக்கியத்தின் இறுதியில் முற்றுப்புள்ளி வரும்.
(எ.கா.): காய்கறிகள் உண்பது மிகவும் நல்லது.
ஆச்சரியக்குறி ( ! ) – உணர்ச்சியை வெளியிடும் போது குறிப்பிடப்படும்.
(எ.கா.): ஐயோ ! கால் வக்கிறதே !
வினாக்குறி (?) – வினாப்பொருளைத் தருகின்ற வாக்கியத்தின் இறுதியில் வினாக்குறி இட வேண்டும்
(எ.கா.): அவன் யார்?

பயிற்சி எண் : 30. பதில்களுக்கு ஏற்ற நிறுத்தற்குறிகளை இடுக.

1. ஐயோ கை வக்கிறதே
2. அவன் பெயர் சந்திரன்
3. உணவு விடுதியில் இட தோசை பூரி கிடைக்கும்
4. ஓடி விளையாடு பாப்பா என்றார் பாரதியார்
5. இந்தியா வல்லரசாகுமா
6. குழந்தை அவல் தின்றது
7. ஆஹா அருவி எவ்வளவு அழகு
8. இறைவனை வணங்குவது நல்லது
9. மின்னுவதெல்லாம் பொன் அல்ல என்பது பழமொழி
10. மிளகாய் மிளகு இவ்விரண்டும் காரம் நிறைந்தவை
11. இன்று மழை வருமா
12. அடடா எவ்வளவு அருமையான ஓவியம்
13. ஆசைகளை அடக்க வேண்டும்
14. பல் நத்தை பூரான் முதலானவை ஊர்வன
15. அரிசி விலை உயர்ந்ததா

தேதி : ...................... 23 ஆசிரியர் கையொப்பம் : .................................

## ஒழுக்கம் உயர்வு தரும்

முன்னுரை :

ஒழுக்கம் என்பது நல்ல பண்புகளின் தொகுப்பாகும். அன்பு, பணிவு, நேர்மை, விட்டுக் கொடுத்தல், இன்சொல் கூறுதல் முதலான பண்பு நல்லொழுக்கம் எனப்படும்.

ஒழுக்கத்தின் சிறப்பு :

ஒழுக்கம் செல்வம், புகழ், முதலானவற்றைத் தரும். ஒழுக்கம் இன்ப வாழ்வைத் தருகிறது. ஒழுக்கம் உயிரைவிட மேலானது. எனவே, நாம் ஒழுக்கத்தை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும்.

ஒழுக்கத்தில் சிறப்பு அடைந்தோர் :

இராமாயணம் இராமனது ஒழுக்கத்தைச் சிறப்பாகக் காட்டுகிறது. இயேசு, புத்தர், காந்தி முதலானோர் வாழ்வு ஒழுக்கத்தை உயர்வுபடுத்துகிறது.

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி"

என்ற குறள் ஒழுக்கமுடையவர் வாழ்வில் மேன்மை பெறுவதைக் கூறுகிறது.

முடிவுரை :

இன்பமான வாழ்க்கைக்குக் காரணமான ஒழுக்கத்தை நாம் கடைப்பிடித்து வாழ வேண்டும். தனி மனித ஒழுக்கத்தால் சமுதாயம் உயர்வுபெறும். எனவே, ஒழுக்கமாக வாழ்வோம்.

பன்முறை
எழுதிப் பழகு.

வார்த்தைகளை உருவாக்கு.

லை ரை ழை
ளை டை றை

| | | |
|---|---|---|
| அ | ஓ | எ |
| ஆ | வ | வே |
| க | வா | சா |
| ம | இ | பா |
| கா | உ | த |
| சி | ஏ | ப |

ஜெல் பேனா பயன்படுத்தவும்.

Designed, Printed & Published By :
Sekar Publishers
An ISO 9001:2000 Certified Company
3/1078/2, Meenampatti, Sattur Road,
Sivakasi - 626189 Tamilnadu - India.
Tel : +914562 274132 Fax: +914562 274133

ISBN 978-93-81240-98-4

Log on to: www.sekardolphin.com